19b

பொது சுற்றறிக்கை இலக்கம் 01 - 17/2008

எனது இலக்கம் : NCD/01/2007
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அலுவலகம்
கொழும்பு 10
2008.05.21 ஆம் திகதி

மாகாண சகாதார செயலாளர்கள்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
போதனா மருத்துவமனை பணிப்பாளர்கள்.
மாகாண மருத்துவமனைகளின் மருத்துவ மேற்பார்வையாளர்கள்
மற்றும் நிறுவனத் தலைவர்கள் அனைவருக்கும்.

**உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் - 2008**
**புகைபிடிக்காத இளம் பராயம்**

உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் - 2008 மே 31 ஆம் திகதிக்கு அமைந்துள்ள வருடாந்தம் நடாத்தப்படும் இந்நாளானது எமக்கு நினைவூட்டுவது புகையிலையின் மூலம் ஏற்படக் கூடிய நோய் நிலைகளை கட்டுப்படுத்துவதற்கு உலக சுகாதார அமைப்பின் செயற்பாடுகள் மற்றும் உலகவாழ் மக்களுக்கு தமது சகாதாரம், வருங்கால சந்ததியினரின் சகாதாரம் மற்றும் சுகாதார ஆரோக்கியத்தோடு வாழ்வதற்கான உரிமைகளை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளக் கூடிய விடயங்கள் யாவை என்பது பற்றியவையாகும். உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தின் இந்த ஆண்டுக்கான தொனிப்பொருளாக அமைவது "புகைபிடிக்காத இளம் பராயம்" என்பதாகும். இந்த தொனிப்பொருளினூடாக ஒரு நாட்டின் இளம் சனத்தொகையினர் புகையிலை உற்பத்திகளை பரீட்சித்துப் பார்த்தல் அல்லது அவற்றிற்கு அடிமையாவதை தடுப்பதற்கான மிகவும் வெற்றிகரமான வழியாக அனைத்து விதமான நேரடி மற்றும் மறைமுகமான விளம்பரங்களையும் முற்றுமுழுதாக தடை செய்தல், புகையிலை உற்பத்தியாளாகளினால் மேற்கொள்ளப்படும் சகல விதமான மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பலதரப்பட்ட செயற்பாடுகளுக்காக அனுசரணை வழங்கல் என்பவற்றை முழுமையாக தடைசெய்வது பற்றி அவதானம் செலுத்தப்படும். இதன் குறிக்கோளாக அமைவது இளம் பராயத்தினிடையே புகையிலை உற்பத்திகளின் பாவனையை இல்லாதொழிப்பதற்காக புகையிலை உற்பத்திகளை விளம்பரப்படுத்துவது தொடர்பாக காணப்படும் சட்ட ஏற்பாடுகளை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள முக்கியத்துவம் பற்றி கவனத்தை ஈர்த்தல் மற்றும் அதனூடாக 100% புகையிலை புகையற்றதொரு சூழலைக் பேணிவருவதை உறுதி செய்வதாகும்.

அதற்கேற்ப உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தின் தொனிப்பொருளின் பக்கம் அதிக கவனம் செலுத்தி சம்மந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களினதும் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பினை அதற்காகப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன். இது தொடர்பான விபரமடங்கிய பிரசுரமொன்று இதனுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விபரங்களை இந்த அமைச்சின் தொற்றாத நோய்கள் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

சுருக்கம்:

1. இந்த ஆண்டின் உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தின் தொனிப்பொருள் தொடர்பாக அனைத்து சுகாதார பதவியணியினரையும் விழிப்பூட்டல்.

2. அதற்குப் பொருத்தமான சுகாதார செய்திகள், துண்டுப் பிரசுரங்கள், பெனர் போன்றவற்றை தயாரித்தல்.

3. சம்மந்தப்பட்ட குழுக்கள்/இடங்கள் என்பவற்றை நோக்காகக் கொண்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
   உதாரணம்:- பாடசாலை சுகாதார சங்கம், இளைஞர் சங்கம், விளையாட்டு சங்கம் மற்றும் சுகாதார சிகிச்சை நிலையங்கள் என்பன.

4. சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் மட்டத்தில் ஆகக் குறைந்தது ஒரு நிகழ்ச்சித் திட்டத்தையாவது நடைமுறைப்படுத்தல்.

5. இந்த உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தை கொண்டாடுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி இணைந்த அறிக்கையொன்றை ஒழுங்கு செய்வதற்காக உங்களது நிறுவனத்தில்/பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் பற்றிய அறிக்கையொன்றை சுகாதார கல்வி உத்தியோகத்தர்களினால் 2008 யூன் மாதம் 30 ஆம் திகதியாகும்போது இந்த அமைச்சின் தொற்றாத நோய்கள் பிரிவின் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

..........................................................
(டாக்டர் அஜித் மெண்டிஸ்)
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

Dr. U. A. Mendis
Director ...
Ministry ...
385, "...
Baddegama ... Thero Mawatha.
Colombo 10.

## உலக புகைத்தல் எதிர்ப்பு தினம்

## தொனிப்பொருள் - புகைபிடிக்காத இளம் பராயம்

உலகிலே இறப்புக்களில் தடுத்துக்கொள்ளக் கூடிய பிரதானமான காரணியாக புகைத்தலைக் குறிப்பிட முடியும். அதன் உற்பத்தியாளர்களே குறிப்பிடுவதன் பிரகாரம் பாவனை மூலம் மரணம் நெருங்கக் கூடிய ஒரேயொரு நுகர்வுக்கான உற்பத்திப் பொருளும் இதுவே. இதை அடிக்கடி பாவிப்பதன் மூலம் 50% வீதத்தினர் மரணிப்பதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளன.

உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசிய வலையத்திலே தற்போது சுமார் 323 மில்லியன் இளைஞர்கள் வாழ்ந்து வருவதுடன், அதில் 85% வீதத்தினர் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே உள்ளனர். பல்வேறு செயற்பாடுகளுக்கு இலகுவில் ஆளாகக் கூடிய இளமைப் பருவத்தைக் கடந்த அவர்கள் பொதுவாக சுகாதார ஆரோக்கியத்துடன் காணப்பட்டாலும்கூட உலகிலே சுகாதார ஆரோக்கியமுடைய இளமையின் கௌரவமான வடிவத்தை மாற்றியமைக்கக் கூடிய பயங்கரமான இணைப்பினை ஏற்படுத்துவதற்கு புகைத்தலானது காரணமாக அமைந்துள்ளது.

புகையிலைக் கைத்தொழிலின் உபாயகரமான தூண்டுதலினூடாக கடுமையாக அடிமையாகும் பழக்கத்தினை ஏற்படுத்தும் அந்த உற்பத்தியுடன் புதிய இளம்வயதினரால் மேற்கொள்ளப்படும் பரீட்சித்துப் பார்த்தலின் காரணமாக அவர்கள் தமது வாழ்நாள் பூராவும் புகைத்தலிலே தங்கிவாழ்பவர்களாக மாறுகின்றனர்.

புகைத்தலின் மூலம் ஏற்படக் கூடிய பயங்கரமான நிலைகளிலிருந்து இளம் பராயத்தினரை பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியின் ஒரு வெற்றிகரமான செயற்பாடாக புகையிலை உற்பத்திகளை விளம்பரம் செய்தல், விற்பனை மேப்பாட்டுப் பணிகள் மற்றும் எந்தவொரு விடயத்தையும் அல்லது நிகழ்வையும் மேற்கொள்வதற்காக புகையிலைக் கைத்தொழிலின் அனுசரணையினை பெற்றுக்கொள்வதனை தடைசெய்துள்ளமையைக் குறிப்பிட முடியும்.

இளம் பராயத்தினர் புகையிலை உற்பத்திகளுக்கும், புகைத்தலுக்கும் அடிமையாக்கும் அதேபோன்று அதை பாவிப்போரில் கிட்டத்தட்ட அரைவாசி பகுதியினருக்கு மரணத்தை விரைவுபடுத்தும் "புகைத்தல் விற்பனையை" அடிப்படையாகக் கொண்டு இந்த ஆண்டிலே புகைத்தல் எதிர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படும். அனுசரணை உட்பட அனைத்து விதமான நேரடி மற்றும் மறைமுக வர்த்தக விளம்பரங்களையும் முற்றாக தடைசெய்தலானது இளம் வயதினரை புகைபாவனைக்குத் தூண்டப்படுவதிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்கான மிகச்சிறந்த வழிமுறையொன்றாக குறிப்பிட முடியும்.

புகைத்தலுக்கு மனம் கவரக்கூடிய வர்த்தக விளம்பரங்கள், விற்பனை மேம்பாடு மற்றும் அனுசரணை விளம்பரங்களுக்கு திறந்திருத்தல் மற்றும் புகையிலை உற்பத்திகளுக்கு இலேசான நுழைவொன்று ஏற்படல், அவற்றைப் பெற்றுக்கொள்வதற்குள்ள இயலுமை, விரும்பத்தக்க விலை மற்றும் அவற்றிற்கு சமூகத்திலே காணப்படும் வரவேற்பு போன்ற விடயங்கள் பரீட்சித்துப் பார்த்தல்களிலும், எந்நேரமும் பாவிப்பதற்கு நபர்களினுள் ஒரு விருப்பத்தை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன. புகைத்தல் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகள், பொதுவாக புதிய இளம் பராயத்தினரிரை புகைத்தலின் பக்கம் ஈர்ப்பதுடன், புகையிலை உற்பத்தி சார்ந்த விளம்பரங்களுக்காக திறந்துவிடப்பட்டிருத்தலானது இளம் பராயத்தினரிடையே அவற்றின் பாவனையை தூண்டுவதற்கான ஆரம்பமாக கொள்ளலாம்.

புகையிலை கைத்தொழிலாளர்களினால் தமது உற்பத்திகளின் விளம்பர நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் உலகம் முழுவதும் பல பில்லியன் டொலர்களை செலவு செய்கின்றனர். அவர்களது விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளின் நோக்கமாக அமைவது புகைத்தலினூடாக இறப்பவர்களின் தொகையினை மீள் நிரப்புவதற்காக புதிதாக இளம் பருவத்தினர் அவர்கள் எதிர்பார்க்கின்றவாறு வாழ்நாள் பூராவும் புகைபிடிக்கும் பழக்கமுள்ளவர்களாக தமது சந்தையினுள் நுழைய வைப்பதாகும்.

புகைத்தல் பற்றிய நேரடியான விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஊடகங்களுக்கு, வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகைகள், பதாதைகள், சுவரொட்டிகள் மற்றும் விளம்பரப் பலகைகள், நேரடித் தபால், கூப்பன்கள், பந்தயம் பிடித்தல், ஒரே வகையினை வேண்டும் நிகழ்ச்சித் திட்டங்கள், விளையாட்டுக் கழகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் போன்ற இளைஞர்களிடையே பிரசித்தி பெற்ற இடங்களிலே இடம்பெறும் விழாக்கள், கலந்துரையாடல்கள் போன்றவற்றிற்கு அனுசரணையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை புகையிலை கைத்தொழிலின் பாரிய அளவிலான தபால் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளவர்களுக்கு மட்டும் விநியோகித்தல் என்பன உள்ளடக்கப்படும்.

<u>எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்</u>

இலங்கையினுள் புகைபிடிப்பதை கட்டுப்படுத்துவதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

மக்களிடம் விடுக்கப்படும் கோரிக்கை

புகைத்தல் தொடர்பான வர்த்தக விளம்பரங்களை தடை செய்தல், அனுசரணை வழங்குவதனை தடை செய்தல் மற்றும் புகையிலை உற்பத்திகளை இலவசமாக நிதியோகிப்பதை தடை செய்தல் போன்ற விடயங்கள் இலங்கையின் சட்டத்தினால் மிகவும் வலியுறுத்தி வெளியிடப்பட்டுள்ளது. அதனால் புகைத்தல் பாவனையினால் ஏற்படக் கூடிய அழிவுகளிலிருந்து எதிர்கால சந்ததியினரை பாதுகாக்கும் பொருட்டு புகைத்தல் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக விதித்துள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொதுமக்களின் முழுமையான ஆதரவினைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுக்கு ஊக்கமளிக்கவும்.